**04.03.2026**

**COS .No. 01/ 2025**

**வா.சா. 1 பெயர்:தினேஷ் த/பெ.குணசேகரன்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**
**குறுக்கு விசாரணை:**

நான் இந்தியன் வங்கி சிங்காரப்பேட்டை கிளையில் எப்போது பணியில் சேர்ந்தேன் என்றால் 26.06.2025 ஆகும். பிரதிவாதியை நேரில் பார்த்துள்ளேன் என்றால் இல்லை. பிரதிவாதி எந்த ஆவணத்தை வைத்து லோன் கேட்டார் என்றால் சிறு தொழில் செய்வதற்காக கடனுக்காக கொட்டேஷன் வைத்து லோன் கேட்டார். பிரதிவாதி எவ்வளவு தொகைக்கு லோன் கேட்டுள்ளார் என்றால் பத்து லட்சம். எங்கள் வங்கி எவ்வளவு ரூபாய் சேங்ஷன் செய்தது என்றால் ரூபாய் 10 லட்சம் ஆகும். எங்கள் வங்கியில் பிரதிவாதியிடம் கடன் உறுதி பத்திரம் ரூபாய் ஒன்பது லட்சத்திற்கு எழுதி வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் பிரதிவாதிக்கு 9 லட்சம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பல்வேறு தவணைகளாக ரூபாய் 6,19,341 கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகையை எங்கள் வங்கி பிரதிவாதி கொடுத்த கொட்டேஷன் அடிப்படையில் ஒன்பது நிறுவனங்களுக்கு பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி மேற்படி கடன் தொகை முழுவதும் கொடுக்கும் படி கேட்டு பல்வேறு முறை கடிதங்கள் வங்கிக்கு கொடுத்தார் என்றால் அவ்வாறான ஆவணங்கள் கோப்பில் இல்லை. பிரதிவாதி பெற்றுள்ள கடன் சிறு தொழில் தொடங்குவதற்கான கடனாகும். அதற்கு மானியமும் உண்டு. மானியம் 3,47,768 ஆகும். பிரதிவாதி அவரது தரப்பில் ஒரு பகுதி தொகையான ரூபாய் 50,000 வைப்பீடு செய்து உள்ளார் என்றால் சரிதான். மேற்படி வைப்பீடு தொகையும் இயந்திரங்கள் வாங்குவதற்காக அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மானியம் யாருக்கு சேரும் என்றால் மூன்று வருட காலத்திற்குள் கடன் தொகை முழுவதும் செலுத்தி விட்டால் அது வாடிக்கையாளருக்கு சென்று விடும். அவ்வாறு மூன்று வருட காலத்திற்குள் கடன் தொகை செலுத்தவில்லை எனில் மேற்படி மானியம் தொகை அவரது கடனில் கழிக்கப்படும். மேற்படி மானியத்தொகை கடன் தொகைக்காக 09.06.2025–ல் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி விவரத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு சொல்லாததற்கு காரணம் என்ன என்றால் அதை கவனிக்காமல் விடுபட்டுள்ளது. பிரதிவாதிகிடமிருந்து ஏமாற்றி பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 13.07.2011 ஆம் தேதியில் ரூபாய் ஒன்பது லட்சம் தொகைக்கு கடன் உறுதி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அது தட்டச்சு தவறாகும். எங்கள் வங்கியில் தவறு நடப்பதற்கு வாய்ப்பு

உண்டு என்றால் இல்லை. பிரதிவாதி வங்கி கடன் குறித்த மொத்த கோப்பையும் எடுத்து வர முடியுமா என்றால் முடியும்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.